உடுபத்தாவ பிரதேச சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உடுபத்தாவ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் உடுபத்தாவ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுடன் இணங்காமை

உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சபையினால் 07 வழக்குகள் நடாத்தப்பட்டதுடன் நிதிக்கூற்றுக்களில் அந்த வழக்குகள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. அந்த வழக்குகளுக்காக 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் வழக்குக் கட்டணமாக சபையின் நிதியத்தில் இருந்து ரூபா 149,500 செலவிடப்பட்டிருந்தது.	தவறு ஒன்றினால் வெளிப்படுத்தப்படாது இருந்ததுடன் 2025 ஆம் ஆண்டு முதல் உரிய குறிப்புக்களை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிக்கூற்றுக்களில் வழக்குகள் தொடர்பாக வெளிப்படுத்துதல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மதிப்பீட்டு பெறுமதி ரூபா 4,092,000 ஆன 02 காணிகள் மற்றும் 04 மயான நிலங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை.	2025 ஆம் ஆண்டில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சகல சொத்துக்களையும் சரியாகக் கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஆ)	பெறுமதி ரூபா 217,000 ஆன யக்கம்வெல உப அலுவலகத்தில் கம்பி வேலியின் பெறுமதி ரூபா 225,000 ஆன கொள்ளுப்பிட்டி வத்த பிரதேச சபைக்குச் சொந்தமான 03 காணிக் கூறுகளின் கம்பி வேலியின் பெறுமதி மற்றும் ரூபா 480,000 ஆன தும்மலசூரிய முன்பள்ளிப்	2025 ஆம் ஆண்டில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சகல மூலதன செலவினங்களையும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	பாடசாலையில் சிறுகல் பதிக்கும் பெறுமதி என்பன மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை.		
(இ)	மாகாண குறித்துரைத்த மானியத்தின் கீழ் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தில் உக்காத கழிவுப் பொருட்களை களஞ்சியப்படுத்தும் கட்டிடத்தை விரிவுபடுத்துவதற்காக ஏற்பட்ட ரூபா 1,000,000 ஆன செலவினம் மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை.	2025 ஆம் ஆண்டில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மூலதன செலவினங்களை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 134 ஆம் பிரிவு	அபிவிருத்தி செய்யப்பட்ட கிராமப் பிரதேசங்களை இனங்கண்டு வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அபிவிருத்தி செய்யப்பட்ட கிராமப் பிரதேசங்களை இனங்கண்டு வெளியிடுதல் 2015 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டதுடன் மக்களால் நிறுவனத்திற்கு எதிராக தற்போது வழக்கு ஒன்று தொடரப்பட்டுள்ளமையால் அதன் காரணமாக ஆதனவரி அறவிடும் போது நிலுவைகள் காணப்படுகின்றது.	அபிவிருத்தி செய்யப்பட்ட கிராமப் பிரதேசங்களை இனங்கண்டு வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்து மக்களுக்கு சேவையினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் VII ஆம் அத்தியாயத்தின் 38(2) ஆம் பிரிவு	நிதி கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமாக உள்ளகக் கட்டுப்பாடு காணப்படுகின்றமைக்கும் அந்த முறைமையின் ஆக்க பூர்வமான தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுகளை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமானதாக பேணிச் செல்வதற்காக தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிந்த	2025 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது நிறைவேற்ற வேண்டிய செயற்பாடுகளின் மீளாய்வின் எழுத்துமூல பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறை ஒன்று பேணிச் செல்லப்படல் வேண்டும்.

	மைக்கும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிறைவேற்ற வேண்டிய எழுத்துமூல மீளாய்வின் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.		
(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 571(2)	05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 4,523,496 ஆன 03 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் ஓய்வுபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	காலாவதியான வைப்புப் பணத்தை வைப்புக்கள் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் ஓய்வு பெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ) பிரதேச சபைகள் நிதி மற்றும் நிர்வாக விதி 218 ஆம் விதி	நியமிக்கப்பட்ட சபை ஒன்றினால் வருடாந்தம் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட பிரகாரம் தற்போது மெய்மையாய்வு சபை நியமிக்கப்பட்டு மெய்மையாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.	விதிகளின் பிரகாரம் வருடாந்தம் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 19,541,885 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 27,529,105 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	வருமான மான மூலம்	2024 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	2024 சிட்டையிடப்பட்ட வருமானம்	2024 சேகரிக்கப்பட்ட வருமானம்	2024 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	2023 சிட்டையிடப்பட்ட வருமானம்	2023 சேகரிக்கப்பட்ட வருமானம்	2023 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000
i.	ஆதன வரியும் வரியும்	4,918	4,456	4,168	4,234	4,810	4,203	3,770	3,945
ii.	வாடகை	15,274	15,824	15,889	339	14,088	9,615	15,024	404
iii.	அனுமதிப்பத்திரக் கட்டணம்	1,463	1,165	1,165	-	1,391	860	860	-
iv.	ஏனைய வருமானம்	93,635	75,119	99,084	65,145	93,404	16,197	86,925	89,110
	மொத்தம்	115,290	96,564	120,306	69,718	113,693	30,875	106,579	93,459

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் உள்ளவாறு ரூபா 93 மில்லியன் ஆன நிலுவை வருமானத்திலும் மற்றும் ரூபா 96 மில்லியன் ஆன ஆண்டின் சிட்டையிடல்களின் கூட்டுத்தொகையிலும் ரூபா 120 மில்லியன் அறவிடப்பட்டதுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 69 மில்லியன் மேலும் நிலுவையாகக் காணப்பட்டது.	2025 ஆம் ஆண்டு முதல் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	நிலுவை வருமானத்தை தாமதம் இன்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	**வீதவரியும் வரியும்**		
(i)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 4,158,900 பெறுமதியான வரி மீதியில் 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்திற்குரிய ரூபா 1,869,034 மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 2,262,866 அறவிடப்படாமல் காணப்பட்டது. அந்த மீதிகளை அறவிடுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டிற்குரிய ஆதனவரி சிட்டையிடல் ரூபா 4,419,189 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,348,099 அதாவது 31 சதவீதம் நிலுவையாகக் காணப்பட்டது.	2025 மார்ச் 31 ஆம் திகதி வரையில் அந்த நிலுவை 71 சதவீதம் வரை நிலுவை அறவிடுவதற்கு முடியுமாக இருந்தது.	சிட்டையிடப்பட்ட வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ) ஏனைய வருமானம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டி இருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 11,956,820 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 50,426,689 அறவிடப்பட்டிருக்கவில்லை.	கிடைக்க வேண்டி இருந்த நீதிமன்றத் தண்டப்பணத்தில் 2025 மார்ச் 31 இல் உள்ளவாறு ரூபா 10,656,820 அறவிடப்பட்டிருந்ததுடன் முத்திரைக் கட்டணம் ரூபா 11,291,550 அறவிடபட்டுள்ளது.	நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்கான உபவிதிகள் விதிக்க வேண்டியிருந்ததாக காணப்பட்ட போதும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் உபவிதிகளைத் தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளப்படாது இருந்ததுடன் விதிக்கப்பட்டிருந்த உபவிதிகள அமுல்படுத்தும் நிலையிலும் காணப்படவில்லை.	2021.12.17 ஆந் திகதி அதிகாரப் பிரதேசத்தில் மீன் வியாபாரத்தை முறைமைப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட உபவிதி இடைக்கால விதியை அங்கீகரித்து அனுப்பபட்ட போதும் இன்னும் பதில் கிடைத்திருக்கவில்லை.	உபவிதிகளை விதித்து சபையின் நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபைக்குச் சொந்தமான பெக்கோ லோடரின் 2024 யூன் 03 ஆந் திகதி பக்க கண்ணாடி உடைந்தமை தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் விசாரணை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த நபர் தீர்மானிக்கப்படாது இருந்ததுடன் பக்க கண்ணாடியை புதிதாக இடுவதற்காக ரூபா 133,990 மதிப்பீடு ஒன்று வழங்கப்பட்டிருந்தது. அந்தத் தொகையில் ரூபா 115,343 காப்புறுதி முகவர் நிறுவனத்தினால் மீளளிப்புச் செய்யப்பட்டதுடன் ரூபா 18,647 குழு தீர்மானத்தின் அடிப்படையில் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் ஆய்வினை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த நபர் இனங்காணப்படாது இருந்ததுடன் பக்க கண்ணாடியை புதிதாக இடுவதற்காக ரூபா 115,343 காப்புறுதி முகவர் நிறுவனத்தினால் ரூபா 18,647 தொகை குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் சபை நிதியத்திலிருந்தும் செலவிடப்பட்டிருந்தது.	காப்புறுதியின் மூலம் இழப்பீட்டை மீளளிப்பு செய்யப்பட்ட போதும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பொறுப்பு வாய்ந்த நபரை இனங்காணல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 12	எதிர்காலத்தில் அறவிடுவதற்கு	கிடைக்க வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு

	கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 71,111,924 ஆகும். அது தொடர்பான காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையிலான காலத்திற்குரிய கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 68,759,453 ஆக இருந்ததுடன் 05 வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 2,325,892 ஆகும். இந்த தொகைகளை அறவிடுவது தொடர்பில் முகாமைத்துவம் கவணம் செலுத்தியிருக்கவில்லை.	நடவடிக்கை எடுக்கப்படும்.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 15 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 41,615,640 ஆகும். அது தொடரபான காலப் பகுப்பாய்வின் பிரகாரம் 01 முதல் 05 வருடங்கள் வரையிலான காலத்திற்குரிய கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 36,879,643 ஆக இருந்ததுடன் அது 05 வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 4,735,996 ஆகும். இந்த மீதிகளின் இருப்பு தொடர்பாகக் கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	செலுத்த வேண்டிய மீதிகளின் இருப்பு தொடர்பாக கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2021 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட சபையினால் பயன்படுத்தப்படுகின்ற CAT மென்பொருள் முறைமை சபையின் சகல நடவடிக்கைகளையும் மேவுகை செய்யும் வகையில் பயன்படுத்த முடியாதிருந்தமையும் சபையின் நடவடிக்கைகள் தொடரபாக தேவையான அறிக்கைகளை பெற்றுக் கொள்வதற்கு முடியாது இருந்தமையும் போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டதுடன் கணக்காய்வு சந்தர்ப்பம் வரையும் அந்தக் குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் நாளது வரையாக்கப்படும்.	குறைபாடுகளை சரி செய்து ஆக்க பூர்வமாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	கிடைக்கப் பெற்ற சுற்றாடல் முறைப்பாடுகளுக்கு உரிய களப் பரிசோதனையின் போது வழங்கப்பட்ட பரிந்துரை மற்றும் சுற்றாடல் குழு பரிந்துரை உரிய	எதிர்காலத்தில் சுற்றாடல் சம்பந்தமான முறைபாடுகளைப் பரீட்சித்து உறுதிப்படுத்துவதற்காக	முறையான திட்ட முறைமை ஒன்றை தயாரித்து அமுல்படுத்துதல் வேண்டும்.

பிரகாரம் அமுல்படுத்தப்பட்டிருந்ததா என பரீட்சித்து உறுதிப்படுத்திக் கொள்வதற்காக முறையான திட்ட முறைமை ஒன்று தயாரித்து அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.	முறையான திட்ட முறைமை ஒன்றை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
வடமேல் மாகாண சபையினால் 2013 இன் 01 ஆம் இலக்க கொள்கை விஞ்ஞாபனத்தின் மூலம் சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களை பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் அந்த பிரதேசத்தின் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் சபையினால் அந்தப் பணிகள் நிறைவேற்றப்படாது இருந்ததுடன் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்ட சமுதாய அடிப்படை அமைப்புக்கள் யாவும் முறையான பிரகாரம் சபையினால் இனங் காணப்பட்டிருக்கவில்லை.	கருத்து தெரிவிக்கப்படவில்லை.	சபை அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்ட சமுதாய அடிப்படை அமைப்புக்களை ஒழுங்குபடுத்தி அதன் நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபைக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற தீயணைப்பு வண்டியை பழுது பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	ஏனைய நிறுவனத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பழுது பார்த்து பயன்படுத்துவதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) சொத்துக்களின் பெறுமதியை நாளது வரையாக மீள் மதிப்பீடு செய்யும் போது சகல சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 50, ரூபா 100 போன்ற பெயரளவுப் பெறுமதி உடைய சொத்துக்கள் பதிவேடுகளில் காணப்பட்டது.	வீதிகள் மற்றும் கிணறுகள் மீள் மதிப்பீடு செய்வதற்காக தேவையான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	சொத்துக்களின் நியாயமான பெறுமதியை கணக்குகளில் வெளிப்படுத்துல் வேண்டும்.
(ஆ) தளபாட உபகரணங்களுக்காக சொத்துப் பதிவேடு ஒன்று பேணிச் செல்லப்படாது இருந்ததுடன் காணி மற்றும் கட்டிடங்கள் போன்ற சொத்துக்கள் தனித்தனியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.	பதிவேடுகளில் குறைபாடுகள் இருக்குமாயின் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துப் பதிவேட்டை சரியாக நாளது வரையான பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ)	சபையினால் பராமரிக்கப்படுகின்ற 05 விளையாட்டு மைதானங்கள் மற்றும் 31 மயான நிலங்கள் கணக்காய்வுத் திகதி வரையிலும் சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.	உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது.	கையேற்கப்படாத சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	சபையினால் பயன் படுத்தப்படுகின்ற போதும் ஏனைய அரசாங்கத்தின் நிறுவனத்தின் பேரில் பதியப்பட்டுள்ள 02 வாகனங்களின் உரித்து கணக்காய்வுத் திகதி வரையிலும் சபைக்கு கையேற்கப்பட்டிருக்க வில்லை.	கையேற்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	வாகனங்களின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.6 பெறுகைகள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் அல்லது மூலப்பொருட்களுக்காக பெறுகை கோவை பேணிச் செல்லப்படாமை, பெறுமதியில் அதிகமான பெறுகைகளுக்காக கொள்வனவு கோரிக்கை, அந்த கோரிக்கைகளுக்கான அங்கீகாரம், கூறுவிலைகள் கோரும் பத்திரிகை அறிவித்தல் கேள்விதாரருக்கு சமர்ப்பிக்கப்பட்ட விலைகள், பெறுகைத் தீர்மானம், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை, பொருள் கட்டளை இடல் போன்றவை உள்ளடக்கிய கோவை பேணிச் செல்லப் பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் கோவை பேணிச் செல்லப்படும்.	பெறுகை நடவடிக்கைகளை வெளிப்படையாக மேற்கொள்வதற்காக கோவை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

3.7 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு ஊழியர்களுக்கு உரிய ரூபா 304,460 கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்த கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தவணையாக செலுத்துவதற்கும் ஓய்வூதியப் பணிக்கொடை கிடைக்கப் பெற்ற பின்னர் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.	கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டு கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
சரியான எதிர்வு கூறல் இல்லாமல் பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டில் 08 வருமான விடயங்களில் பாதீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையே 02 சதவீதம் முதல் 52 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்களும், 05 செலவின விடயங்களில் 10 சதவீதம் முதல் 33 சதவீதம் வரையிலான வீச்சிலும் முரண்கள் அவதானிக்கப்பட்டது.	எதிர்காலத்தில் முரண்கள் ஏற்படாத வகையில் பாதீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பாதீடு நிறுவனத்தின் முகாமைத்துவத்திற்கு உதவும் வகையில் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்துவதற்கு இயலுமான வகையில் தயாரித்தல் வேண்டும்.

4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக மீளாய்வாண்டில் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட 02 இலக்குகளுக்கு உரிய செயல் முன்னேற்றம் 50 சதவீதத்தை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டதுடன் 02 இலக்குகளின் செயல்முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.	சிக்கலான நிதி நிலைமையின் அடிப்படையில் குறித்துரைத்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.	நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.